பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 . 07 . 2024 ***TUESDAY*** 7. 15***AM***
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. 2024-25ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்து உரையாற்றுகிறார்.

2. தெலங்கானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

3. கன்வார் யாத்திரை வழித்தடத்தில் வணிகம் செய்யும் வியாபாரிகள் தங்களுடைய பெயர் பலகைகளை வைக்க வேண்டும் என்ற உத்தரபிரதேசம் மற்றும் உத்ராகண்ட் மாநில அரசுகளின் உத்தரவுகளுக்கு, உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

4. வங்கி வாடிக்கையாளர்களின் புகார்களுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்று ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் திரு. ராஜேஷ்வர் ராவ் வலியுறுத்தியுள்ளார்.

5. இந்திய துப்பாக்கிச் சுடுதல் வீரர் அபினவ் பிந்ராவிற்கு ஒலிம்பிக் ஆர்டர் என்ற சிறப்பு விருதை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது.

>>>>><<<<<

நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்கிறார்.

நிதியமைச்சராக பொறுப்பு வகிக்கும் அவர் தொடர்ந்து ஏழாவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்கிறார்.

இதுதொடர்பாக வேளாண் சங்க பிரதிநிதிகள், வேளாண் பொருளாதார நிபுணர்கள், வர்த்தக சங்கங்கள், கல்வி, சுகாதாரத்துறை, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை, கட்டமைப்பு, எரிசக்தி, நகர்ப்புற வளர்ச்சித்துறை உள்ளிட்ட துறைகளின் பிரதிநிதிகளுடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

பட்ஜெட்டை தாக்கல் செய்து திருமதி. நிர்மலா சீதாராமன் உரையாற்றும் நிகழ்வை, அகில இந்திய வானொலி காலை 11 மணி முதல் நேரடி ஒலிபரப்பு செய்கிறது.

இதன் காரணமாக, மதியம் 12.40 மணிக்கான ஆகாஷவாணி செய்தி அறிக்கை பிற்பகல் 1.50-க்கு ஒலிபரப்பாகும்.

திருச்சியிலிருந்து ஒலிபரப்பாகும் மாநில செய்தி அறிக்கை, பிற்பகல் மணி 1.45-க்கு பதிலாக பிற்பகல் 3 மணிக்கு ஒலிபரப்பாகும்.

பட்ஜெட் குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இரவு எட்டரை மணிக்கு நேரலையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில், பொருளாதார நிபுணர் கௌரி, பத்திரிகையாளர் ஜெகந்நாதன் மற்றும் ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கின்றனர்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

தெலங்கானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

அம்மாநில துணை முதலமைச்சரும், நிதியமைச்சருமான திரு. மல்லுபாட்டி விக்கிரமர்க்கா நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டை நாளை மறுநாள் தாக்கல் செய்கிறார்.

திறன் பல்கலைக் கழகம், வருவாய் இணையதளம் தொடர்பான மசோதாக்கள் இக்கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் தெலங்கானாவில் ஆட்சியமைத்த காங்கிரஸ் அரசு, முதல் முறையாக முழு பட்ஜெட்டை தாக்கல் செய்யவுள்ளது.

>>>>><<<<<

இந்தியா – எகிப்து இடையேயான நட்புறவு அண்மைக்காலங்களில் பெரும் வளர்ச்சியடைந்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற எகிப்து தேசிய தின கொண்டாட்டத்தில் உரையாற்றிய அவர், பொருளாதார ஒத்துழைப்பு மூலம் இரு நாடுகளும் பயனடைந்துள்ளதாக கூறினார்.

அத்துடன் புதிய வாய்ப்புகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மருந்து, மின்னணு, பசுமை எரிசக்தி உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த 50க்கு மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் எகிப்தில் முதலீடு செய்துள்ளதாக திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

சமூக கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிடும் வகையில் 72 தனியார் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுடன் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அத்துறைக்கான அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களை, குறைந்த செலவில் பல்வேறு நிறுவனங்கள் உற்பத்தி செய்து வருவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

கடந்த நிதியாண்டில் நிலக்கரி உற்பத்தி 11 புள்ளி ஆறு ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி, கடந்த நிதியாண்டில் 997 மில்லியன் டன் அளவிற்கு நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டதாக கூறினார்.

இது, அதன் முந்தைய நிதியாண்டில் 893 மில்லியன் டன்னாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் நிலக்கரி தேவை ஆயிரத்து 233 மில்லியன் டன் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

>>>>><<<<<

கடந்த ஜூன் மாதம் 4ஆம் தேதியன்று பங்குச்சந்தையில் சுமார் 30 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வீழ்ச்சி அடைந்திருந்தாலும், அது ஐந்து நாட்களுக்குள் சீரடைந்துவிட்டதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இம்மாதம் 18ஆம் தேதி நிலவரப்படி, பங்குச்சந்தையின் மதிப்பு 59 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

பங்குச்சந்தை வீழ்ச்சியின் மூலம் முறையற்ற வர்த்தகம் நடைபெற்றதாக எந்த தகவலும் இந்திய பங்குச்சந்தை மற்றும் பரிமாற்ற வாரியத்திற்கு கிடைக்கவில்லை என்று திரு. பங்கஜ் சௌத்ரி கூறினார்.

>>>>><<<<<

வங்கி வாடிக்கையாளர்களின் புகார்களுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்று ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் திரு. ராஜேஷ்வர் ராவ் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வாடிக்கையாளர்களின் கருத்துக்கள் அடிப்படையில் அவர்களுக்காக சேவைகளை வங்கிகள் மேம்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்கு தாமதமாக பதில் அளித்தல், உதவி எண்ணில் நீண்ட நேரம் காத்திருக்க வைத்தல், மின்னஞ்சல் மூலம் அளிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தாமதமாக பதிலளித்தல் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும் ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

கன்வார் யாத்திரை வழித்தடத்தில் வணிகம் செய்யும் வியாபாரிகள் தங்களுடைய பெயர் பலகைகளை வைக்க வேண்டும் என்ற உத்தரபிரதேசம் மற்றும் உத்ராகண்ட் மாநில அரசுகளின் உத்தரவுகளுக்கு, உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ரிஷிகேஷ் ராய், எஸ்.வி.என். பாட்டி ஆகியோர் அடங்கிய அமர்வு இதுதொடர்பாக வரும் வெள்ளிக்கிழமைக்குள் பதிலளிக்குமாறு உத்தரவிட்டது.

எனினும், உணவகங்கள் தாங்கள் விநியோகிக்கும் உணவு வகைகள் குறித்த தகவல் பலகைகளை வைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இளநிலை மருத்துவ பட்டப்படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வின் இயற்பியல் கேள்வி ஒன்றுக்கு, இரண்டு தெரிவுகளை சரியான பதிலாக கருதும் தேசிய தேர்வு முகமையின் முடிவு குறித்து, தில்லி ஐஐடி-யின் நிபணர் குழு கருத்து தெரிவிக்குமாறு உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு, இன்று நண்பகல் 12 மணிக்குள் நிபுணர்கள் தங்கள் கருத்தை உச்சநீதிமன்றத்தின் பதிவாளரிடம் சமர்ப்பிக்குமாறு கூறியுள்ளது.

தெளிவற்ற இயற்பியல் கேள்வியின் மூலம் கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டதால், 44 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றது குறித்து மனுதாரர்கள் வழக்கு தொடர்ந்தனர்.

நீட் தேர்வுக்கு **NCERT**–யின் புதிய பாடப்புத்தகங்களை கற்குமாறு தேசிய தேர்வு முகமையின் தகவலுக்கு முரணாக இந்த முடிவு அமைந்துள்ளது என்று மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

இதுகுறித்த வழக்கு இன்று நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

தெலங்கானாவில் பத்ராச்சலத்தில் கோதாவரி ஆற்றின் நீர்மட்டம் 51 புள்ளி ஒன்று பூஜ்யம் அடியை எட்டியுள்ளது.

இதையடுத்து, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

பத்ராச்சலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 50-க்கும் மேற்பட்ட நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பத்ராதிரி, கோத்தகுடேன் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தெலங்கானாவில் நாளை வரை மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 10 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

குஜராத், கொங்கன், கோவா, மகாராஷ்ட்ராவின் மத்தியப் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடக்கு, வடமேற்கு, மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளின் பல்வேறு இடங்களில் நாளை வரை மிக கனமழை பெய்யக்கூடும் என்று அது கூறியுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி ஆகிய பகுதிகளில் இன்று ஈரப்பதத்துடன் கூடிய வெப்பநிலை இருக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பாக முதலாவது தனிநபர் தங்கப்பதக்கம் வென்ற துப்பாக்கிச் சுடுதல் வீரர் அபினவ் பிந்ராவிற்கு ஒலிம்பிக் ஆர்டர் என்ற சிறப்பு விருதை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது.

ஒலிம்பிக் போட்டியில் சிறப்பான பங்களிப்பை அளித்ததற்காக அவருக்கு இவ்விருது வழங்கப்படவுள்ளது.

பாரிஸில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் கூட்டத்தில் இந்த விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் இந்தசிறப்பு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அபினவ் பிந்ராவுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைபில் பிரிவில் அபினவ் பிந்ரா தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

ஆஸ்திரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 1-6, 7-6 என்ற செட்கணக்கில், ஸ்லோவாக்கியாவின் **Lukas Klein-**ஐ வென்றார்.

***>>>>><<<<<***

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

தம்புலாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் பாகிஸ்தான் - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் இலங்கை, 144 ரன் வித்தியாசத்தில் மலேசியாவையும், பங்களாதேஷ் 7 விக்கெட் வித்தியாசத்தில் தாய்லாந்தையும் வென்றன.

***>>>>><<<<<***

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 14 ரன் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

***>>>>>END<<<<<***